# கதைகளின் துறைமுகம்

அரபு சிறுகதைகள்

தமிழில் : பிரியா



# கதைகளின் துறைமுகம்

## அரபு சிறுகதைகள்

**தமிழில் : பிரியா**

To.
Dr. Al Zubaidi
With lots of thanks
. Priya
4/11/23.

டிஸ்கவரி பப்ளிகேஷன்ஸ்
எண்: 9, பிளாட் எண்: 1080A, ரோஹிணி பிளாட்ஸ்
முனுசாமி சாலை, கே.கே.நகர் மேற்கு,
சென்னை – 600 078. பேச: 99404 46650

# பொருளடக்கம்


1. கரப்பான் பூச்சியும் குருவியும்
   (The Cockroach and the Sparrow) — 07
2. கார்னேஷன் பூ
   (Carnation flower) — 11
3. பெரிய கதவு
   (The big gate) — 15
4. தகரத்தைத் தங்கமாக்கும் வித்தை
   (The Elixir...Perhaps) — 19
5. திருமண நாற்காலி சம்பவம்
   (The wedding sofa incident) — 27
6. ஊதியம்
   (The salary) — 31
7. இனி எல்லாம் நலமே
   (Everything will be fine) — 35
8. பெருந்தன்மையான மனிதன்
   (A generous man) — 43
9. ஒரு வெள்ளைக்கடிகாரமும் கண்ணாடியும்
   (A white clock and a mirror) — 48
10. வெள்ளைத் தாடியுடன் கூடிய ஒரு மனிதன்
    (The man with white beard) — 53
11. கடைசி இரவின் கதை
    (The last night tale) — 57
12. நாம் இன்று இரவு பொருட்கள் வாங்கச் செல்லுவோம்
    (We will go shopping tonight) — 64
13. இன்னுமொரு கோப்பை காஃபி
    (Another cup of coffee) — 72
14. நோர்பர்ட் லேய்
    (Norbert Lie) — 77

15. ஹலிமா
(Halimah) 84

16. தேனீ
(The Bee) 87

17. யூசுஃபின் நினைவில்
(In memory of Yousef) 90

18. ஆசையின் கல்
(The stone of desire) 96

19. பிலால் மலை
(Bilal Mountain) 111

20. அரை மணி நேரக் அலுப்பு
(Half an hour of boredom) 114

21. அறுவை சிகிச்சை
(Surgery) 117

22. மாரடைப்ப
(Heart attack) 123

23. வேர்கள்
(Roots) 128

24. தடை செய்யப்பட்ட புத்தகம்
(The consignment) 131

# 8.
# பெருந்தன்மையான மனிதன்

ரசீதின் அலைபேசி சிணுங்கியபோது அவன் சோபாவில் சாய்ந்து தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றைப் பார்த்துக்கொண்டிருந்தான். அவன் நெருங்கிய நண்பன் சலீமின் பெயர் அலைபேசித் திரையில் ஒளிர்ந்து கொண்டிருந்தது. எப்பொழுதும்போல அது சிறிது நேரம் ஒலிக்கட்டும் என்று நினைத்தபடி ரசீத் அதை அணைக்காமல் இருந்தான். சலீம் எப்பொழுது அழைத்தாலும் ரசீத் இப்படித்தான் செய்வான். ஏனெனில் அப்பொழுதுதான் இவன் ஏதோ வேலையில் மும்முரமாக இருக்கிறான் என்று அவன் நினைப்பான். அதுமட்டுமல்ல அப்படி எடுக்காமல் விடும்போதெல்லாம் சலீம் எப்போதும் பேசும் வசனம் ஒன்றைக் கேட்பதற்காகவும்தான். அது என்னவென்றால்,

"எங்கடா போயிருந்த, ஒரு மணி நேரமா போன் அடிச்சுட்டு இருக்கு"

"போன் எடுக்கலேனா இருபது நொடில அது தானாவே கட்டாயிரும் அப்புறம் எப்படி ஒரு மணி நேரமா அடிக்கும்"

அவன் அப்படியே கலாய்க்கத் தொடங்கி விடுவான். ரஷீதுக்கும் சலீமின் நகைச்சுவை உணர்வு மிகவும் பிடிக்குமென்பதால், அவனுடன் அமர்ந்து மணிக்கணக்கில் பேசிக்கொண்டிருப்பதை எப்பொழுதும் விரும்புவான். அவர்கள் இருவரும் அமீரகத்தின் அல் எய்ன் நகரிலிருக்கும் அல்குவைதத் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்பதால் குழந்தைப் பருவத்திலிருந்தே நெருங்கிய நண்பர்கள்.

சலீமும், ரஷீதும் அவர்களது வழக்கமான நலம் விசாரிப்புகளை முடித்துக்கொண்டதும், சலீம் அவசரமாக

"சரி ஒரு செய்தி ஒண்ணு தெரியுமா?"

வழக்கம்போல் அவன் எதுவும் புதிய நகைச்சுவை ஒன்றை சொல்லப் போகிறான் என்று நினைத்த ரஷீத் சிரித்துக்கொண்டே "இல்லை" என்றான்.

"ஜசீம்" என்றான் சலீம். அவன் கூறியது ஒரு காலத்தில் அல்எய்னில் உள்ள பல்கலைக்கழகம் ஒன்றில் அவர்களுடன் படித்த அபுதாபியைச் சேர்ந்த நண்பன் ஒருவனைப் பற்றி.

"ஏன் அவனுக்கு என்ன ஆச்சு" ரஷீத் கொஞ்சம் கவலையுடன் கேட்டான்.

"அவன் இன்னைக்கு இரவு சாப்பாட்டுக்கு நம்ம ரெண்டு பேரையும் கூப்பிட்டிருக்கான்" சொல்லிவிட்டுச் சலீம் சிரித்தான்.

ஒரு நீண்ட பெருமூச்சை இழுத்து விட்ட இரசீத்,

"நீ கொஞ்ச நேரத்துல என்னைப் பயப்படுத்திட்ட. நான் கூட அவனுக்கு எதாச்சும் ஆயிடுச்சோனு நினைச்சேன். சரி இப்ப அதுக்கென்ன" என்றான்.

"அது எப்படி அதுக்கு என்னனு கேட்குற. நான் சொன்னது புரியலயா அவன் நம்ம ரெண்டு பேரையும் சாப்பிட அழைச்சுருக்கான் நீ அதுல என்ன பிரச்சினைனு கேட்குற?" சலீம் சத்தமாய்க் கூறினான்.

"இதுல எதுவும் பிரச்சினை இருக்குற மாதிரி எனக்குத் தெரியலயே. உண்மையில அவன் ரொம்ப நல்லவன்" என்றான் ரஷீத்.

"அவன் கடைசியா நம்மல சாப்பிடக் கூப்பிட்டுப் போனது உனக்கு ஞாபகம் இருக்கா?"

"இல்லையே..."

"அஞ்சு வருசம் முன்னாடி. நாம பல்கலைக்கழகத்துல பட்டம் வாங்கினப்போ" சலீம் விவரித்தான்.

"இன்னைக்கு என்ன விசேசம். ஒரு வேல ஜசீம் மேற்படிப்பு எதும் முடிச்சுப் பட்டம் வாங்கிட்டானா?" சிரிப்புடன் கேட்டான் ரஷீத்.

"அவன் மேற்படிப்பு வேற படிச்சானாக்கும்" சலீம் கிண்டலாகக் கேட்டான்.

"பின்ன வேற என்ன விசேசம்"

"எனக்கும் தெரியல..." "ஆனா அத விட என்ன ஆச்சரியப் படுத்துன விசயம் என்னனா அவன் நம்மல வரச்சொன்ன இடம்தான்" ரஷீத் தொடர்ந்தான்.

"என்ன எதாச்சும் சீப் இந்தியன் ரெஸ்டாரெண்டா"

"அதுதான் இல்ல... அல்எய்ன் ஹில்டனுக்கு..."

“என்னது... என்னால நம்பவே முடியலயே. என்னயா நடக்குது உலகத்துல” ரஷீத் ஆச்சரியத்தில் கூச்சலிட்டான்.

“நான் உங்கிட்ட சொன்னேன்ல என்னமோ ஒண்ணு சரியில்லாம இருக்குதுனு”

“அவன் எப்ப அல்எயின் வந்தான்” ரஷீத் கேட்டான்.

“தெரியல. இன்னைக்குச் சாப்பிடப் போகும்போது அவன் கிட்டயே கேட்டுத் தெரிஞ்சுக்கலாம். சரி ஒரு பத்து நிமிசத்துல நான் உன் வீட்டுக்கிட்ட வரேன். தயாரா இரு ரெண்டு பேரும் சேர்ந்து போவோம்” என்றான் சலீம்.

“சரி. நான் காத்திருக்கேன் வா”

பத்து நிமிடம் கழித்து சலீம் ரஷீதின் வீட்டினருகே வந்தான். இருவருமாய்ச் சேர்ந்து அவர்கள் வீடிருக்கும் பகுதியான அல் குவைதத்தில் இருக்கும் ஹில்டன் ஹோட்டலை நோக்கி நடக்கத் தொடங்கினர். செல்லும் வழியில் அவர்கள் ஜசீமின் கஞ்சத்தனத்தைப் பற்றிப் பேசிச் சிரித்தவாறே சென்றனர். அவன் ஒவ்வொருமுறை இவர்களைச் சந்திக்க வரும்போதும் அனைவருமாய்ச் சேர்ந்து வெளியே சாப்பிடச் செல்வார்கள். ஒவ்வொரு முறையும் சலீமும், ரஷீதும்தான் சாப்பிட்டதற்கான பணத்தைக் கொடுக்கப் போட்டி போடுவார்கள் ஜசீம் எதிலும் கலந்துகொள்ளவே மாட்டான்.

அமைதியாக இருப்பானே ஒழிய ஒரு முறையாவது தான் பணம் கொடுப்பதாய்ச் சொல்லவே மாட்டான். ஜசீம் அல்எயினுக்கு வெளியே இருந்து வந்திருக்கும் விருந்தாளி. அதனால், அவன் பணம் கொடுக்க வேண்டிய அவசியமில்லையென்று ரசீதுதான் எப்பொழுதும் அவனுக்காய்ப் பேசுவான். இருப்பினும் சலீம் விடுவதாய் இல்லை ஜசீம் குறைந்தபட்சம் தானும் பணம் கொடுப்பதாய் நடிக்கவாவது செய்திருக்கலாமே என்றான்.

ஹோட்டலுக்குள் நுழைந்தவர்கள் நேராக வரவேற்பரைக்குச் சென்று ஜசீமின் பெயரைச் சொல்லி அறை எண்ணைக் கேட்டறிந்தனர். அவர்கள் ஜசீமின் அறைக்குச் சென்றபோது அங்கே ஜசீமுடன் சேர்ந்து இளைஞர் ஒருவரும் இவர்களுக்காகக் காத்திருந்தார். அந்த இளைஞனை எஞ்சினியர் ஹமாத் என்று ஜசீம் இருவருக்கும் அறிமுகப்படுத்தினான். அவர்கள் பரஸ்பரம் ஒருவருக்கொருவர் வணக்கம் கூறிக்கொண்டதும், தான் நேற்று இரவு அலுவல் வேலை விசயமாய் உடன் வேலை செய்யும் ஹமாதுடன் சேர்ந்து அல்எயின் வந்ததாய் ஜசீம் தெரிவித்தான்.

சில நிமிடங்களுக்குப் பிறகு கதவு தட்டப்படும் ஓசை கேட்டது. இரண்டு பணியாளர்கள் உள்ளே வந்து சாப்பாட்டு மேசையின் மேல் உணவுப் பதார்த்தங்களை எடுத்து வைத்துவிட்டுச் சென்றனர். சலீம் அந்த உணவுப் பொருட்கள் அனைத்தையும் திகைப்புடன் பார்த்துக்கொண்டிருந்தான். ஹமாத் அங்கே இருந்ததால் எதற்காய் இந்த விருந்தென்று ஜசீமிடம் கேட்பதற்கு அவனுக்குத் தயக்கமாய் இருந்தது. இருப்பினும் கேலியாகக் கேட்பது போல்,

"எதற்காய் இத்தனை உணவுகளை வரவழைத்தாய். இதில் பாதி இருந்தால்கூட நம் அனைவருக்கும் அது சரியாய் இருக்குமே" என்று கேட்டான்.

"கவலைப்படாதே இதற்கான செலவெல்லாம் அரசாங்கத்தினுடையதுதான்" ஜசீம் புன்னகையுடன் பதிலளித்தான்.

"அரசாங்கம் தங்கள் விருந்தாளிகளுடன் சேர்த்து அவங்க விருந்தாளிக்குமா பணம் கொடுக்கும்" சலீம் ஆச்சரியத்துடன் கேட்டான்.

"நிச்சயமா இல்ல. ஆனா இவங்க ரெண்டு பேருக்கு குடுக்குற சாப்பாடே நாலு பேருக்கு அளவா இருக்கும்" ஜசீம் சிரித்துக்கொண்டே பதிலளித்தான்.

அதன் பிறகு நால்வருமாய் ஒருவருக்கொருவர் பேசிச் சிரித்துக்கொண்டு சாப்பாட்டு மேசையில் அமர்ந்து சாப்பிடத் தொடங்கினர்.

போதும் போதும் என்று சொன்னபோதும் கூட ஜசீம் அவனது இரு நண்பர்களின் தட்டிலும் மேலும் மேலும் உணவை எடுத்து வைத்துக்கொண்டேயிருந்தான்.

"சாப்பிடுங்க பசங்களா... எப்படியும் இதுல மீதி இருக்க எல்லாத்தையும் அவங்க குப்பைலதான் போடப் போறாங்க நல்லா சாப்பிடுங்க" ஜசீம் சொல்லிக்கொண்டேயிருந்தான்.

எரிச்சலடைந்த சலீம் "எனக்கு எப்படி அது தெரியும்" என்று கேட்டான்.

"நான்தான் நேத்து என் கண்ணால பார்த்தேனே. பணியாளர்கள் இந்தப் பாத்திரங்கள திரும்ப எடுக்க வந்தப்ப இதுல மீதி இருந்த எல்லாத்தையும் கூடக் கொண்டு வந்த குப்பைத் தொட்டிலதான் போட்டாங்க"

"எனக்கு அத பார்த்ததும் ஒரு மாதிரி ஆயிடுச்சு. அதுனாலதான் குப்பைல போடுறதுக்குப் பதிலா நீங்களாவது சாப்பிடட்டுமேனு இன்னைக்கு உங்க ரெண்டு பேரையும் கூப்பிட்டேன்" ஜசீம் தொடர்ந்து விவரித்தான்.

அப்போது சலீம் விழுங்கிய உணவு அவனது தொண்டைக் குழிக்குள் மாட்டிக்கொண்டது. அவனால் உணவை விழுங்க முடியவில்லை. விழி பிதுங்கி நின்றான். சரியான நேரத்தில் ரசீத் அவனது முதுகில் ஒரு குத்து விட்டதும் தொண்டையில் நின்ற உணவு வழுக்கி உள்ளே சென்றது. சலீம் நிம்மதியடைந்து தன்னைக் காப்பாற்றியதற்காய்க் கடவுளுக்கு நன்றி கூறியவாறே ஒரு மடக்குத் தண்ணீரைக் குடித்தான்.

பின்பு, ஜசீமைப் பார்த்துக் குற்றம் சுமத்தும் நோக்கில் "அப்படினா குப்பைத் தொட்டிக்குப் போறதுக்குப் பதிலா இந்தச் சாப்பாட்டை யெல்லாம் எங்க வயித்துக்குள்ள போடுறது நல்லதுனு நினைச்சு எங்கள கூப்பிட்டியா" என்று கேட்டான்.

ரஷீத் சிரிக்கத் தொடங்கினான். ஜசீம் சங்கடத்துடன் சலீமிடம் மன்னிப்பு கேட்டபடி,

"இல்ல இல்ல. நான் அப்படிச் சொல்ல வரல. நான் எப்படியா இருந்தாலும் இன்னைக்கு உங்களுக்குப் போன் பண்ணிட்டு சாப்பிட வெளில போலானுதான் நினைச்சுட்டு இருந்தேன். ஆனா எப்படியும் வெளில போனா உங்க ரெண்டு பேருக்கும்தானே செலவு அதிகம் அதனாலதான் உங்கள இங்கயே கூப்பிட்டு இந்தக் காஸ்ட்லியான சாப்பாட்ட உங்களோட சேர்ந்து சப்பிடலானு இங்க வரச்சொன்னேன்" என்றான்.

ரஷீதும், சலீமும் ஒருவரை ஒருவர் அர்த்தத்துடன் பார்த்துக் கொண்டனர். சிரித்துக்கொண்டே சலீம் ரசீதிடம் சொன்னான்,

"ஹோட்டலுக்கு வர வழியில நான் உங்கிட்ட சொன்னேன்ல ரஷீத், ஜசீம் ஒரு பெருந்தன்மையான மனுஷன்னு"

**மூல எழுத்தாளர் :** அப்துல் ஹகீம் அல்சுபைதி *(Absul Hakeem AlZubaidi)*, அமீரகம் *(UAE)*.

**ஆங்கில மொழியாக்கம் :** அப்துல் ஹகீம் அல்சுபைதி *(Absul Hakeem AlZubaidi)*



காயமடைந்த பாலஸ்தீன போராளிகள் சிலர் வார்டில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்பதை அவன் புரிந்துகொண்டான். அவர்கள், அரபு நாடான லெபனானின் தலைநகர் பெய்ரூட்டில் இருந்து வெளியேற்றப்பட்டவர்கள் என்பதை நினைவு கூர்ந்தான். பெய்ரூட், கவிஞர்களின் சொர்க்கமாகவும், சுதந்திரம், நவீனத்துவம் மற்றும் கலாச்சாரச் செழிப்பின் உருவகமாகவும் இருந்தது.

சிறுவயதில் தான் அனுபவிக்காத அல்லது கேள்விப்படாத நிகழ்வுகளைப் பற்றிய சில எண்ணங்களும் பிரமைகளும் அவரது நனவில் வெளிப்பட்டன. ஜூன் போர், தெற்கு ஏமன் சுதந்திரம், கமால் அப்தெல் நாசரின் மரணம், அக்டோபர் போர், லெபனான் உள்நாட்டுப் போர், ஜனாதிபதி அன்வர் சதாத்தின் ஜெருசலேம் பயணம், ஏமன் கம்யூனிஸ்ட் கட்சியின் தொடக்கம், வளைகுடாப் போர், தெற்கு லெபனான் மீதான இஸ்ரேலிய படையெடுப்பு மற்றும் பெய்ரூட்டில் இருந்து பாலஸ்தீன போராளிகள் வெளியேறுதல் ஆகிய ரேடியோவின் குரலுடன் அந்தப் படங்கள் அவரது மனத் திரையைக் கடந்து சென்றன. அப்படியானால், தலைவர் நாசர் இறந்துவிட்டார். அவர் வெகுதூரம் சென்றுவிட்டார். ஐயோ, பாலஸ்தீனியர்கள் மீண்டும் துரத்தப்பட்டார்களா?.

DP-0305 Rs. 180

சிறுகதை

ISBN: 978-93-95285-90-2

9 789395 285902

www.discoverybookpalace.com